# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.189/2023 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வைரக்கன்னு | த-பெ | பெரியகருப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 64/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.04.2026.**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். 10.01.2023 அன்று மாலை 4.30 மணியளவில் வசந்தி பேக்கரி அருகில் நானும் மணி என்பவரும் டீ சாப்பிடுவதற்காக அங்கு வந்த போது சம்பவ சாலையில் தெற்கில் இருந்து வடக்கு புறமாக சைக்கிளில் ஒரு சிறுவன் வந்தார். அப்போது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி புதுக்கோட்டை செல்லும் அரசு பேருந்து ஒன்று வேகமாக வந்தது. அப்போது சிறுவன் குறுக்கே கடந்து விட்டார். அப்போது பேருந்து அவர் மீது மோதியது. சத்தம் கேட்டதும் அங்கு சென்று பார்த்த போது, கீழே விழுந்த கிறுவனுக்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. அவரை துாக்கிக்கொண்டிருந்த போது அவரது அம்மா அங்கு வந்தார். பின்னர் அந்த வழியாக வந்த காரில் சிகிச்சைக்காக அந்த சிறுவனை காரைக்குடி KMC மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி சம்பவ சமயத்தில் காயம்பட்ட சிறுவனை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கும் முயற்சியில் இருந்ததால் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விசாரணையில் நான் மேற்படி விவரங்களை சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> =**

போலீசார் என்னை எங்கு எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ தின்த்தன்று சம்பவயிடத்தில் மாலை 4.30 மணியளவில் விசாரணை செய்தார்கள். புகார் யார் எப்போது கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தின் போது காயம்பட்ட நபரை ஏற்றி சென்ற காரின் விவரம், சம்பவயிடத்திற்கு வந்த காயம்பட்டவரின் தாயாரின் இருசக்கர வாகனத்தின் விவரங்கள், புதுக்கோட்டை சென்ற பேருந்தின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. காயம்பட்ட நபர் சம்பவயிடத்தில் காயம் பட்டவுடன் சென்று தான் பார்த்தோம் என்றால்

சரிதான். அதற்கு முன்பு இருசக்கர வாகனம் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 16:52:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.189/2023 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மணியன் | த-பெ | சாத்தையா |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 80/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல்எஸ்டேட் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.04.2026.**

**எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ரியல்எஸ்டேட் செய்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. யாருக்கு விபத்து எப்படி நேர்ந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. யார் விபத்து ஏற்படுத்தினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 10.01.2023 அன்று மாலை 4.30 மணியளவில் வைரக்கன்னு என்பவருடன் 100 அடி சாலையில் வசந்தி பேக்கரி அருகே டீ சாப்பிட்டுக்கொண்டிருந்த போது சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த அரசு பேருந்து அந்த அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து சம்பவ சாலையில் கைக்சிளில் சென்று கொண்டிருந்த சிறுவன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், சம்பவத்தை நேரடியாக பார்த்து அந்த சிறுவனை அந்த வழியாக வந்த காரில் KMC மருத்துவமனைக்கு சிகிச்சைக்கா அனுப்பி வைத்து விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை நேரடியாக பார்த்து நடந்த விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 16:52:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.189/2023 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரவிவேலு | த-பெ | ராஜு |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 58/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.04.2026.**

**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். 10.01.2023 அன்று மாலை 4.00 மணியளவில் நான் 100 அடி சாலை வசந்தி பேக்கரி அருகில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது பேருந்து நிலையத்தில் இருந்து அரசு பேருந்து ஒன்று வந்தது. வேகமாக வந்து சைக்கிளில் சம்பவ சாலையில் வந்த சிறுவன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. சத்தம் கேட்டவுடன் போயி பார்த்தோம். அந்த வழியாக வந்த வாகனத்தின் உதவியுடன் KMC மருத்துவமனைக்கு அவரை சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். பின்னர் போலீசார் அங்கு வந்து ஆவணத்தில் கையொப்பம் கேட்டார்கள். நான் அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கையொப்பம் எதற்கு போட்டேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் விபத்து நடந்ததற்காக கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். விபத்து நான் சொன்னது போல் 4.30 மணிக்கு தான் நடைபெற்றது என்றால் சரிதான். 4.30 மணிக்கு தான் விபத்து நடைபெற்றது நான் 4.00 மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 16:52:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.